# Chapter - 8

## Speech for 27-November-2021

இது வரை பிரம்மம், பிரபஞ்சம் ஆகியவற்றை மேல் மனம் மற்றும் அகந்தையின் பார்வையை கொண்டு எப்படி புரிந்துக் கொள்வது என்று பார்த்தோம். இந்த அத்தியாயத்தில் -அவற்றிலுள்ள பேருண்மையை -ultimate reality-யை - எப்படி தெரிந்துக் கொள்வது, எப்படி தொடர்பு கொள்வது என்று கூறுகிறார். அந்த ஞானத்தை யோகிகள் எப்படி பெற்றனர், அந்த உச்ச ஞானத்தை நேரடியாக எப்படி பெற்றனர், அதுவே வேதாந்த ஞானம் என்றால், அதைப் பெற்ற வழிமுறைகள் என்ன?-. நாமெல்லாம் இந்த உலகத்தின் படைப்புகள்- எல்லாம் ஒரே சச்சிதானந்தத்தின் வெளிப்பாடே என்றால்-, நம்மால் ஏன் அதை உணர முடியவில்லை. எல்லாருக்குள்ளும் அந்த இறைவன் இருக்கிறான் என்றால் - நம்மால் ஏன் காண முடியவில்லை- உணர முடியவில்லை?, அதை அடைய அகந்தை தடை என்றால், அந்த அகந்தை ஏற்பட காரணம் என்ன? அதை உருவாக்கியவனும் அவன் தானே?, அதை உணர்ந்தால், வேறு எந்த வகையில் தேடினால் அந்த ஞானம் கிடைக்கும்- என்பது நமக்குப் புரிந்து விடும் என்கிறார் பகவான். அதை புரிந்துக் கொள்ள அதன் அடிப்படையாக, கீழ்கண்ட theme -களை எடுத்துக் கொண்டேன்.

- உணர்வு, மனதின், பிழைகளை பகுத்தறிவு சரி செய்யும்.
- ஐம்புலன்களுக்கும் அப்பால் பிற புலன்களையும் உணர்வுமனதால் உருவாக்க முடியும்.
- எல்லா அனுபவமும் உள்ளுணர்வின் அடிப்படையான ஐக்கிய ஞானமாகும்.
- விழிப்பான ஐக்கியத்தால் வரும் நேரடி ஞானத்தை அகந்தையின் செய்கைகளால் இழந்து விட்டோம்

ஆகிய theme -களை எடுத்துக் கொள்கிறேன்.

ஏழாம் அத்தியாயம் பரிணாமத்திற்கு முரணாக அகந்தை இருக்கிறது என்று கூறும் போது, அதன் பிரித்தறியும் தன்மையை திசை மாற்றினால், நாம் பரிணாமத்தில் முன்னேற முடியும் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தோம். என்றாலும் அதை ஒரு ஞானமாக- வாழ்வில் வெளிப்படும் ஞானமாக- பெற முடியுமா என்று இந்த எட்டாவது அத்தியாயத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்க முனைந்தேன்.

அறிவில் இருந்து புலன் விலக்கப் பட்டால், ஞானமாகிறது என்பதை இந்த அத்தியாயத்தின் ஒரு வரிச் சுருக்கமாக எடுத்துக் கொள்ளலாம். அப்படிப்

பார்த்தால் சச்சிதானந்தத்திற்கும், அகந்தைக்கும் உள்ள தொடர்பு புரியும். புலன் அறிவை பகுத்தறிவால் திருத்தவே அந்த கருவி உள்ளது என்று புரியும்.

இதில் knowlege by identity என்பதை அகந்தையிலிருந்து வெளியே வரும் கோணத்தில், சென்ற இரண்டு கூடல்களில் சில உதாரணங்களை கூறியிருந்தேன். அவற்றை இந்த அத்தியாயத்தின் நோக்கில் பார்க்கும் போது அவற்றையும் புலன்களே  சொல்கிறது என்பது புரிகிறது. எது நல்லது என்று நாம் கண்ட, கேட்ட, அறிந்தவற்றிலிருந்து எடுத்துக் கொள்கிறோம். அதற்கு மனம் வடிவம் கொடுக்கிறது. சரியென நாம் நினைத்த திசையில் செல்ல direction -ஐக் கொடுக்கிறது.

நாம் பரிணாமத்தில் முன்னேற - இப்படி நாம் செய்யும் அனைத்தும் -நம் மனதின் திறனால் பெற்றவையே. ஐம்புலன்களை கொண்டவை விலங்கு என்றால்- மனிதனுக்கு மனம் என்று ஒன்று இருப்பதால், ஆறாவது அறிவு பெற்றவன் ஆகிறான். அதனால் - ஐம்புலன்களால் நாம் பெறும் அறிவு எல்லாம் நம் மனதின் திறனுக்கு உட்பட்டவையே.  ஆனால் உண்மையாக சித்தத்தில், பரிணாமத்தில் வளர வேண்டும் என்றால், இப்படி புலன்களை கருவியாக, அல்லது சாட்சியாக வைத்து- நம் மனம் நடத்தும் வாழ்க்கையை- நாம் கடக்க வேண்டும். புலன்களாலும், அது தரும் அறிவாலும் அதை ஏற்கும் மனதாலும் நாம் வாழும் வரை- நம்மால் இந்த ஜட வாழ்வை-, ஜட உலகத்தை தான்- அறிய முடியும்.  ஒவ்வொரு மனிதனுள்ளும் புலன்களைக் கடந்த,- மனதைக் கடந்த- நுட்பமான திறன்கள் உள்ளது. அதை concious-ஆக உணர ஆரம்பித்தால், நம் ஆன்மா வெளியே வந்து நம் வாழ்வை நடத்தும்.

உதாரணமாக ஸ்பரிசம் என்றால் தொட்டால் தான் உணர முடியும் என்று நினைக்கிறோம். ஆனால் பல நேரங்களில் கர்மயோகியை  நினைத்தவுடன், உண்மை என்று கூறுமளவிற்கு அவர் தலையில் கை வைத்து ஆசீர்வதிப்பதை உணர முடிகிறது. பல நேரங்களில் past consecration செய்து  செயல்களை மாற்றும் போது அல்லது சிறு மனமாற்றம், சூழலை மாற்றும் போது, அன்னை நம் அருகிலேயே எப்போதும் இருக்கிறார் - நம் மனமாற்றத்திற்கு, திருவுருமாற்றத்திற்கு காத்திருக்கிறார் என்பதை உணர முடிகிறது. கண்ணை திறந்து அன்னை படத்தை பார்ப்பதை விட, கண்ணை மூடி பார்ப்பது இன்னும் 3-dimension இல் real -ஆக இருக்கிறது. அன்னையிடம் மனதில், பேசுவதை விட- அமைதியாக இருக்கும் போது அதிகம் புரிகிறது. இவையெல்லாம் knowledge by identity -யின் வேறு வகைகள்.

இதை process ஆகப் பார்த்தால், நம் மனம் - வெளியே இருக்கும் அனைத்திற்கும்- உள்ளே உள்ளவற்றிற்கும்- ஒரு இணக்கத்தீர்வை ஏற்படுத்தும் போது நமக்கு ஒருமை புரிகிறது. அடுத்தது- அடுத்த உயர்ந்த நிலைகளை, தொட்டு, அமைதி அடையும் போது, அதாவது அந்த பிரிவினையிலிருந்து வெளியே வரும் போது- நமக்கு ஒரு சூட்சம பார்வை-, ஞானம் வருகிறது. நமக்கும் அன்னைக்கும் இருக்கும் இடைவெளி குறையக் குறைய, அந்த சத்தியத்திற்கான பார்வை, ஞானம் அதிகமாகிறது. அதிமனநிலையை அடைந்து அது இரண்டும் ஒன்றே என்று புரியும் வரை இதைத் தொடர வேண்டும். அதை பெறும் திறனில் ஒன்றாக pure reason என்பதை பயன் படுத்தலாம். நம்மை அறியாமல் பல இடங்களில் அதை பயன் படுத்துகிறோம். அதை தூய அறிவு, தூய ஞானம் என்றும் வெவ்வேறு இடங்களில் கர்மயோகி குறிப்பிடுகிறார்.

நாமே கோபமாக மாறும் போது அதே நிலையில் அது தவறு என்று உணரும் போது நாம், நம் கோபத்தை அதிகமாகப் புரிந்துக் கொள்கிறோம். நம்மிடம் உள்ள falsehood -ஐ எல்லாம் நாம் அப்படித்தான் புரிந்துக் கொள்கிறோம். அதனால் இது வரை பிரித்து அறிந்ததை இனி இணைத்து அறிவது தான் நாம் செய்ய வேண்டியது. நான் பார்த்ததை தான் நம்புவேன், கேட்டதை தான் நம்புவேன், மனது இடம் கொடுத்தால் தான் செய்வேன் என்று நியாயங்களை பேசி அகந்தையின் உள்ளே சென்று பின் வெளியே வருகிறோம். அப்படி இல்லாமல், ஒரு விஷயத்தில், செயலின், சூழலின், உள்ளுறை ஞானத்தை ஏற்று செய்ய பழக வேண்டும்.

ஒரு முறை Singapore செல்ல வேண்டி, அனைத்து ஏற்பாடுகளும் முடிந்த பிறகு, மறுநாள் காலை flight - ஆறு மணிக்கு என்றால்- இன்று மாலை, தியான மையம் சென்றேன். பிரார்த்தனை செய்து விட்டு வெளியே வந்த போது, ஏதோ சரியில்லை என்று தோன்றியது. எப்போதும் அன்னையிடம் சொல்லி விட்டு வரும் போது வரும் நிம்மதி அன்று வரவில்லை என்று கவனித்தேன். குழப்பத்திலேயே வீட்டிற்கு வந்து மீண்டும் ஒரு முறை எடுத்து வைத்த பொருட்கள், documents, tickets, passport என்று அனைத்தையும் சரி பார்த்த போது தான் தெரிந்தது, என் Visa -வில் passport எண் தவறாக இருக்கிறது என்று. Travels -க்கு phone செய்து கேட்ட போது, மற்ற details எல்லாம் சரியாக இருக்கிறது இல்லையா, ஒன்றும் பிரச்சினை இல்லை, செல்லலாம் என்றார்கள். Self-declaration கொடுத்து செல்லலாம் என்றார்கள். என்றாலும் எனக்கு அது சரியாகப் படவில்லை. அதனால் செல்லவில்லை. இங்கிருந்து சென்றாலும் Singapore -இல் இறங்கிய பிறகு என்னவெல்லாம் நடந்திருக்கலாம் என்பது பலர் சொல்வதைக் கேட்ட போது, அன்று தியான

மையத்தில் வந்த உள்ளுணர்வுக்கான காரணம் புரிந்தது. சமர்ப்பனமான செயல் என்றால், அந்த காரியம் முடிந்து விட்ட நிம்மதி வர வேண்டும் என்னும் ஞானத்தின் சாரத்தில் புரிந்துக் கொண்டு concious -ஆக ஆராய்ந்து, காரணத்தை தேடியதால் பெற்ற உள்ளுணர்வு அது.

அது போல insight என்பதற்கு உதாரணமாக நகரத்தில் மாடு மேய்ப்பவன், பல மாடுகளை மேய்க்கத் திண்டாடுவான். நகர தெருக்களில், Highways -களில் , சாலையில் பார்த்தால் இது புரியும். ஆனால் அவை விரும்பும் ஒரு கன்றை தடவி- முன்னால் ஒட்டிச் சென்றால்-, மாடுகள் அமைதியாக பின் தொடரும் என்பதைத் கர்மயோகி தந்திருப்பார். அது அனுபவச் சாரம். யாரும் சொல்லித் தந்ததல்ல. சிறு வயதில் இருந்து கவனிப்பதில் தானே வருவது. வானம் பார்த்து நேரம் சொல்வது, மேகம் பார்த்து தூறலா, கன மழையா என்று சொல்வதெல்லாம் பல காலம் முண்பல்ல, 70-களில் கூட என் தாத்தா இருக்கும் போதே நடந்துக் கொண்டு தான் இருந்தது. வாசனை மூலமாக, மாடுகளின் நிலை கொள்ளா தன்மைகளை பார்த்து, ஒரு மாட்டுக் கொட்டகையில் வெளி ஆள் வந்தானா , பாம்பு உள்ளதா, உணவு, உடல் சரியில்லையா என்பது போன்று பல சொல்லுவார். இன்று படித்த, Vetenary Doctor-கள் கூட அதை செய்ய முடிவதில்லை. சகுனங்களை பார்த்து நடக்க இருப்பதை சொல்வபர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

ஒரு முறை - கர்மயோகியுடன் பலரும் பேசிக் கொண்டிருந்த போது, ஒரு ஆங்கிலேயர் ஒரு சொற்றொடரை சொல்லி விட்டு - இதற்கு ஒரே வார்த்தை ஆங்கிலத்தில் இருக்கிறது - சட்டென நினைவுக்கு வரவில்லை என்றார். அந்த வார்த்தை சட்டென எனக்குத் தோன்றியது. சொன்னேன். அவர்கள் சென்ற பிறகு கர்மயோகி பேசிய போது, அவர் மேல் ( antha angileyar mel) உன் கவனம், concentration -ஐ கவனித்தேன் என்று சொல்லி வேறொரு சொற்றொடருக்கு வார்த்தை தெரியுமா என்று கேட்டார். சட்டென சொல்ல முடியவில்லை. உடனே அவர் shelf -இல் இருந்த dictionary -ஐ காட்டி (அது A to Z , மூன்று அல்லது நான்கு volume கொண்ட dictionary ), இதில் உனக்குத் தோன்றுவதை எடுத்துப் பார். நீ நினைக்கும் வார்த்தை வருகிறதா என்று பார் என்றார். அந்த வார்த்தை R -ரில் ஆரம்பித்ததாக ஞாபகம் . அது எந்த volume -இல் வரும் என்று தெரியாது. குத்துமதிப்பாக மூன்றாவது volume இல் வரும் என்று எடுத்துக் கொண்டாலும், அங்கு அதே line -னில் தான் அடுக்கப்பட்டிருக்குமா என்றும் தெரியாது. என்றாலும் எடுத்து அவர் சொன்னப்படி முதலில் தோன்றிய பக்கத்தை திறந்தேன். அந்த வார்த்தை அந்த பக்கத்தில் நான் விரல் வைத்த இடத்திலேயே இருந்தது. நம் ஆர்வம், உள்ளுணர்வு சரியாக இருந்தால் நமக்குத் தேவையானது கிடைக்கும். இங்கு R எந்த volume -யில் வரும் என்று

பார்த்து அந்த volume எடுத்து spellingwise பார்த்திருந்தாலும் இது கிடைத்திருக்கும் - அது logic and reasoning போன்றது அப்போதும் அடைவோம். ஆனால் கர்மயோகி சொன்னார் என்பதற்காக அப்படியே செய்வது புலன்களில் இருந்து வெளியே வருவது. அது சாரத்தை வாழ்வில் காட்டியது. Rapid opening பின் உள்ள தத்துவம் இது தான். Savitri , Synthesis of Yoga போன்றவற்றை Rapid opening-இல் புரிவதில்லை என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். சரியான உணர்வோடு, ஆர்வத்தோடு திறந்தால் அது சொல்ல வருவது புரியும்.

அது போல பல இடங்களில், புலன்கள், அபிப்ராயங்களுக்கு உட்பட்டே நாம் பார்ப்பதால், நமக்கு உண்மையான பார்வை, உணர்வு என்ன சொல்கிறது என்று புரிவதில்லை. ஒருமுறை spastic child பற்றி பேச்சு வந்த போது, கர்மயோகி - They are the most clever என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்களை பார்த்து பரிதாபப்பட்டே எனக்குப் பழக்கம். அப்படிப்பட்டவர்களை கர்மயோகி அதிகம் பார்த்ததில்லை என்பதால் அப்படி சொல்கிறார் என்று நினைத்தேன். அவர் சொன்ன தத்துவத்தின் பேரில் கவனித்தபோது தான்- அது உண்மை என்று புரிந்தது. அவர்களின் இயலாமை என்பது கால் பங்கு தான், மீதி அதன் சாதகம் தெரிந்து அவர்கள் அதை உபயோகப்படுத்துவது- என்று அதன் பின் பலரைக் கவனித்த போது எனக்குப் புரிந்தது.

இதை அடிப்படையாக வைத்து அப்பாவிகளின் அப்பாவித் தனத்திற்கு பின்னால் இருக்கும் காரணத்தை பார் என்றும் கூறியிருக்கிறார். அதன் பிறகு தான் எனக்குத் தெரிந்த அப்பாவிகள், பயந்தவர்கள் என்று நான் நினைப்பவர்களை கவனிக்க ஆரம்பித்தேன். உண்மையில் அவர்கள் எல்லாம் அவர்களுக்கு என்று வரும் போது மிகத் தெளிவாக தான் இருக்கிறார்கள். தன் தேவைகளை சரியாகவோ, பிடிவாதமாகவோ பெற்றுக் கொள்கிறார்கள். அவர்களுக்கு உதவினால், நாம் பாவமாகிப் போவோம் என்று பிறகு புரிந்தது. பயந்தவர்கள் எல்லாம் உலகுக்கு பயந்தவர்கள், வீட்டில் அடாவடியாக இருப்பவர்கள். வீட்டில் புலி வெளியில் எலி என்னும் பழமொழி போல பலரை அதன் பிறகே கவனித்தேன். உயர் ஞானத்தைப் பெறுமுன் - புலன்களில் இருந்து, மேல்மனதின், அப்பிராயங்களில் இருந்து வெளியே வந்து குறைந்த பட்சம் மேற் சொன்னது போல உள்ளுறை ஞானத்தையாவது பெற வேண்டும்.

அதை விளக்கும் இந்த அத்தியாயத்தில் - ஆங்கில வார்த்தைக்கான – இணையான வார்த்தைகளாக நான் தரும் தமிழ் வார்த்தைகள் சரியா,

எனக்குப் புரிந்ததை வெளிப்படுத்த உதவுகிறதா என்றால் என்னை பொறுத்தவரை இல்லை என்றே சொல்வேன். Tamil cube , Tamil Lexican போன்றவற்றில் தேடினால் ஏராளமான சமமான தமிழ் வார்த்தைகள் உள்ளன. ஆனால் Life Divine -க்கு பகவான் சொல்லும் next generation அல்லது next species க்கான கருத்துக்களுக்கு அவை பொருந்தவில்லை என்பது மட்டுமல்ல, நான் கற்றுக் கொண்டவையோடு பொருத்திப் பார்க்கும் போது அவை பல நேரங்கள் அனர்த்தமாகி விடுகிறது.

கர்மயோகியின் பல கட்டுரைகளைப் படிக்கும் போது - உதாரணமாக intution என்பதை சில கட்டுரைகளில் உள்ளுணர்வு என்று கூறும் கர்மயோகி சில கட்டுரைகளில் உள்ளுறை ஞானம், அல்லது ஞானம் என்றும் குறிப்பிடுகிறார். அதைக் குறிக்க bracket -இல் (intuition என்பதை small i -ஐ போட்டோ, அல்லது capital -i -ஐ போட்டோ குறிப்பிடுகிறார்). அதே போல insight என்பதை உட்பார்வை, மனக் கண் என்று குறிப்பிடுவதை- சில இடங்களில் ஞானக் கண் என்று குறிப்பிடுகிறார். அதனால் நான் எடுக்கும் தமிழ் வார்த்தைகளின் அர்த்தம் மாறுவதாக எனக்குப் படுகிறது.

இந்த அத்தியாயம் பிரம்ம ஞானத்தைப் பெற வேதாந்தம் ஏற்ற வழிகளை பற்றி பேசுவதால் அதற்கான வார்த்தைகளான Intellenence , Intellect , Insight , Intuition , Logic , Reason போன்றவை புரிய சரியான வார்த்தைகள் எனக்குப் பிடிபடவில்லை. சமர்ப்பனனிடம் இது பற்றி பேசினாலும்- அவர் அளவிற்கு ஞானமோ-, அறிவோ-, புரிதலோ -எனக்கு இல்லாததால், அதைத் தெளிவாகக் கூற முடியவில்லை. என் நிலை தான் இங்கு இருக்கும் பலருக்கும் இருக்கும் என்று நினைக்கிறேன். அதனால் - எனக்கு புரிந்த வகையில் ஆங்கிலத்திலும் தமிழிலும் மாறி மாறி தருகிறேன். என் வழி எப்போதும் புரிதலை விட எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதிலேயே இருக்கும் என்பதால் அப்படி நான் சிந்தித்ததை இங்கே தருகிறேன்.

நடைமுறையில் ஒரு நிகழ்வை எடுத்துக் கொண்டு இந்த வார்த்தைகளை புரிந்துக் கொள்ள நினைத்தேன். சென்னையில் Trade Centre என்று விழாக்கள், கூடல்கள், exibition-கள் நடக்கும் இடம் ஒன்று உண்டு. அங்கே நடக்கும் நிகழ்வின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அங்கு பாதுகாப்பு இருக்கும். அந்த இடத்தை கடக்கும் போது இருக்கும் பாதுகாப்பைப் பார்த்து அந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர முடியும். Security மட்டும் - அதுவும் கார்களை ஒழுங்கு செய்ய மட்டுமே இருந்தால் - அது சாதாரண நிகழ்வு என்று புரிந்து விடும். அது நம் அனுபவம், படித்தல் , கேட்டல், ஆகியவற்றின் மூலம் பெற்ற அறிவு என்பதால் Intelligence என்று எடுத்துக் கொள்ளலாம். அதாவது புத்தி.

அதுவே police ஆக இருந்தால், திறப்பு விழாவுக்கு ஒரு VIP வருகிறார் என்று புரிந்துக் கொள்ளலாம். அது கூரிய புத்தி. Security -க்கும், police -க்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் உண்டு. அது மந்த புத்தி.  இருக்கும் போலீஸின் அளவை வைத்து இது பெரிய நிகழ்ச்சி, சிறிய நிகழ்ச்சி, முக்கியமான நிகழ்ச்சி, என்னும் அளவில் அல்லது அங்கே நிற்கும் போலீஸ் rank -ஐ கவனித்துக் கணிக்க முடிந்தால், அது intellect. புத்தி ஜீவி. முதல்வர் வருகிறாரா, பிரதமர், ஜனாதிபதி வருகிறாரா என்று Rank, police பாதுகாப்பு வாகனங்கள், சாதனங்கள் போன்றவற்றை ஆராய்ந்து எந்த நிலைக்கு எத்தகைய பாதுகாப்பு தேவை, அல்லது இவ்வளவு ஆர்ப்பாட்டம் பரபரப்பு ஏன் என்று புரிந்தால் , அது logic - தர்க்கத்தின் அடிப்படையில் புரிந்துக் கொள்வது. அப்போது அப்படி என்ன முக்கியமான நிகழ்வு இருக்கப் போகிறது என்னும் curiosity  and guess அவா மற்றும் அனுமானத்தை ஏற்படுத்தினால் அது reason - காரண ஆய்வின் முதல் படி.

அப்போது அங்கே நடப்பது வைர, வைடூர்யங்களுக்கான exhibition என்று தெரிய வருகிறது. அதை உறுதி படுத்திக் கொள்ள நம் அனுபவம், அறிவு, ஆகியவற்றின் அடிப்படையில் Traffic diversion , drone -கள் , crane boom camera ஆகியவை இருக்கிறதா என்று பார்த்து அதை உறுதிப்படுத்திக்கொண்டால் அது ratioanlity  - பகுத்தறிவு ஆகிறது.

இவையெல்லாம் இந்த எண்ணங்களின் ஆராய்ச்சி இல்லாமல் பார்த்தாலும் அந்த கூட்டம், பாதுகாப்பு, பரபரப்பு ஆகியவற்றை பார்த்தவுடன் ஏன் இப்படி கோஹினூர் வைரம் வைத்திருப்பது போல இருக்கிறார்கள் என்று உள்ளுணர்வு கேட்டால் தூய ஞானம் - pure reason . அது foundation for intuitive mind . நேரடி ஞானம், ரிஷியின் ஞானம். இது இல்லை, இது இல்லை என்று விலக்கி அல்லது இறைவனைப் பற்றி நம் உணர்வுகளுக்கு ஆதாரத்தை தேடி பிரம்மத்தை பற்றிய ஞானத்தை நேரடியாகப் பெறுவது intuition. முதல் நிலையில் உள்ளுணர்வு என்றும், இறுதி நிலையில் ஞானம் என்றும் குறிப்பிடுகிறார். Police , பாதுகாப்பு, trafic , security , என்றெல்லாம் பிரித்து பார்த்து  அதன் நிலைகளை அறிந்து ஒன்றை முடிவு செய்யாமல், அதாவது பிரித்து பார்க்க தெரியாமல் (ஒன்றுக்கொன்று இருக்கும் தொடர்பை பார்க்காமலேயே) இவையெல்லாம் இருந்தால் இது தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்ய முடிந்தால் அது insight  - முதல் நிலையில் உட்பார்வை, மனக்கண் என்றும் உயர் நிலையில் அதை ஞானக் கண் என்றும் குறிப்பிடுகிறார்.

இவை எல்லாவற்றையும் தாண்டியது Supermind - அதிமனம். அது exhibition பற்றி அனைத்தும் தெரிவது மட்டுமல்ல, பாதுகாப்பு, மற்றும் திருடர்கள் இருந்தால் அவர்களையும், அவர்களின் மனநிலையையும், மற்றும் வைரம், அவற்றின் தன்மை, மதிப்பு, அதை உருவாக்கிடும் விதம் அதாவது இரும்பிலிருந்து வைரத்தை உருவாக்கிய ரசவாதம் போன்ற ஞானம் அத்தனையும் க்ஷண நேரத்தில் தோன்றுவது அதி மனம்.

இப்படி யோசிக்கும் போது நடைமுறையில் இவற்றை நாம் பல இடங்களில் unconscious -ஆக செய்து கொண்டு தான் இருக்கிறோம்.

கடந்த 20 வருட மனிதர்களைப் பற்றிய என் அனுபவம் அதன் நினைவு, அதாவது data அனுபவ புத்தியாக intelligence ஆக இருக்கிறது. அதனால் இன்று ஒருவர் என்னுடன் பேசுகிறார், Business செய்ய வருகிறார் என்றால் அவரது உடல் மொழி, பேச்சு, நடத்தை, ஆகியவற்றை கவனித்தால் ஓரளவு அவருடன் Business செய்யலாமா, நம்பத் தகுந்தவரா என்று முடிவு செய்வேன். அது system and organisation -ஐ பொருத்தும் இருக்கும். சில நேரங்களில் அதை சில நிமிடங்களிலேயே முடிவு செய்து விடுவேன். அது intellect . புத்தி ஜீவி. என் intelligence -ன் சாரம்.

சில நேரங்களில் அவர் சென்ற பிறகு -திடீரென்று ஒரு குறை அல்லது ஒரு நிறை - எண்ணத்தில் தோன்றும். அது insight -உட்பார்வை. அது நடப்பது, நடக்கப் போவது போன்றவற்ற்றிக்கான என் அனுபவத்தின் அடிப்படையில் சாரம் புரிவது. சில சமயம் எல்லாம் முடிந்த பிறகும் ஏதோ தவறாக இருக்கிறது என்று தோன்றும். அது உள்ளுணர்வு. Intuition - அந்த உள்ளுணர்வை ஆராய்ந்தால் - அதை பற்றிய நேரடி ஞானம் முழுமை, முக்காலம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஞானம் கிடைக்கும். அதைச் சுருக்கமாக கடந்ததை நிகழ்வதில் பொருத்தி எதிர்காலத்தை சரியாக கணிக்க முடிந்தவன் ஞானி என்கிறார்.

அதற்கு அடிப்படைத் தேவை எல்லாவற்றிலும் ஒரு ஐக்கியம். நான் வழக்கமாக எடுத்துக் கொள்ளும் உதாரணம் - லஞ்சம். நாம் இணக்கத் தீர்வு , பிறர் நிலை பார்வை, correspondence , என்றெல்லாம் பார்த்தாலும், எல்லாவற்றிலும் சற்றே நாம் உயர்ந்தவர் என்ற பார்வை இருக்கும். அல்லது நான் பணிவானவன், அற்பப்பதர் போன்ற அகந்தையின் அடக்கமான எண்ணம் இருக்கும். அப்படி இல்லாமல் ஐக்கியம் என்பது நாம் prosperity மற்றும் வாழ்வில் முன்னேற்றதிக்காக எதையும் செய்வோம், அன்னை, பகவான், கர்மயோகி அவர்களை அதற்காக மட்டுமே பயன்படுத்திக்

கொள்வோம். அது போலத் தான் லஞ்சம் வாங்குவோரும் இருக்கிறார் என்ற உணர்வின், உணர்ச்சியின் ஐக்கியமே அவர் ஏன் அப்படி இருக்கிறார், நாம் ஏன் இப்படி இருக்கிறோம், உலகில் லஞ்சம் எப்படி வந்தது, ஏன் இருக்கிறது அது நன்மைக்காகவே இருக்கிறது, பரிணாமத்தை வளர்க்க அது ஒரு முக்கிய கருவி, அதன் மூலம் inflation ஏன் வருகிறது, அது எப்படி நாட்டில் aspiration -ஐ அதிகப்படுத்துகிறது என்பது போன்ற ஐக்கியத்தின் கேள்விகள் அனைத்தும் ஒரே நொடியில் பதில் அளிக்கவல்லது. அது நேரடி ஞானம்.

இன்று நாம் நம் உச்ச கட்ட ஞானமாக நினைப்பது , நாம் ஏற்றுக் கொண்ட ஒரு உயர்ந்த மனப்பான்மையின் கோட்பாடுகளையே. ஆனால் அதை உணர்வு, உணர்ச்சி, ஏற்றுக் கொள்ளும்போதே முழுமை அடைகிறது. Vital and senses should endorse it . லஞ்சம் தவறு என்று தெரியும். சட்டம் அதற்கு எதிரானது என்றும் தெரியும். பல பெரிய மனிதர்கள் கூட அந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதும் தெரியும். ஆனாலும் நம்மைப் பொறுத்தவரை சட்டம் என்பது புத்தகத்தில் மட்டுமே உள்ளது. காரணம் ஒரு உயர்ந்த பண்பைப் பற்றிய நம் எண்ணம், அனுபவம் அடிப்படையில் ஆராயும் போது, தர்க்கமாக , logic ஆக பார்க்கும் போது - அது நடைமுறைக்கு சாத்தியமில்லை, சமுதாயத்தை எதிர்க்க முடியாது என்பது போன்ற நம் மனம், மனம் செய்யும் தர்க்கம் வெல்கிறது. அல்லது அதையெல்லாம் பார்த்தால் முடியாது, பண்புகளை விட என் முன்னேற்றம், சமுதாயம்-, காரியம்-, உறவுகள்- முக்கியம் போன்ற reason - காரணம் அதைத் தடுக்கிறது.

அதே போல Non-reaction , non-initiative , silent will போன்றவற்றைப் பற்றி தெரிந்தாலும், அதன் பலன் தெரிந்தாலும், நம் logic -அதை ஏற்றுக் கொள்ள விடுவதில்லை. உணர்வு ஏற்றுக் கொள்ளாததால் நம் காரணங்களுக்காக, நம் intelligence, நம் intellect படி செய்கிறோம். அதுவே முரண்பாடுகளுக்கு, துன்பங்களுக்கு காரணம். அப்படி இல்லாமல் நம்மால் இதை logic of the Mother என்னும் அளவில் பார்த்தால், நம்மால் அவற்றின் பின் உள்ள ஞானத்தைப் பெற முடியும். அந்த பண்புகளை, நம்மால் பிரிவினை பார்க்காமல் - அகந்தையின் பார்வையில்-, சுயநலத்தின் பார்வையில் பார்க்காமல்- செய்ய முடியும். அதன் மூலம் வாழ்வில் பிரம்மத்தை உணர முடியும். என் வாழ்வில் பல விஷயங்களை நேரடியாக அன்னையின் logic ஆக அறிவை நம்பாதே என்பதையோ, பரிதாபம், பரோபகாரம் அகந்தை என்பதையோ பார்த்திருந்தால் - நான் சில வருடங்கள் செலவழித்து பெற்ற ஞானத்தை உடனே பெற்று இருக்க முடியும்.

யாருக்காவது உதவி செய்யலாமா என்று கேட்கும் போது சமர்ப்பணம் செய் வழி விடும் என்று சொல்லியிருக்கிறார்கள். எப்படி வழி விடும் என்று தெரியாததாலேயே - பலருக்கும் உதவுவதை தவிர்த்திருக்கிறேன். கர்மயோகியிடம் பேசும் போதுதான் அதன் பின் உள்ள பொருள் புரிந்தது. logic, reason போன்றவற்றை அதன் உயர்நிலைகளிளை பற்றி கர்மயோகியும், பகவானும் நிறைய எழுதியிருக்கிறார்கள். ஆனால் அந்த நிலைக்கே செல்ல விடாமல், அல்லது செல்வது பற்றி சொல்லத் தெரியாமல், சமர்ப்பணம் செய், சரணாகதி செய் என்று உயர் நிலைகளை எடுத்துக் கொள்ள சொல்லி அறிவுறுத்தியதால் அதை பற்றிய அடிப்படை புரிதல் இல்லாததால், சிந்திக்கும் திறனை இழந்து விட்டோம். அதோடு நமக்கு இயல்பாக இருக்கும் உள்ளுணர்வுகளையும் இழந்து விட்டோம் - என்னை பொறுத்தவரை மனிதாபிமானம் கூட இல்லாதவர்களாக மாறி விட்டோம் என்றே சொல்வேன். ஆனால் அப்படி பட்ட அறிவுரையை தந்தவர்கள் எல்லாம் தங்கள் குடும்பத்தில் அனைவரையும் சுதந்திரம் என்ற பெயரில், பிறர் நிலை பார்வை என்ற பெயரில் அனுமதித்தார்கள் என்பதை கவனிக்கும் நிலை கூட, உணர்வு கூட நமக்கு வரவில்லை என்பதே உண்மை. அன்னை என்ன சொல்கிறார் என்னும் அன்னைக்கான சிந்தனை அன்னையை வழிப்படும் முறைகளில் ஒன்று என்று கர்மயோகி கூறியிருக்கிறார்கள்.

நான் இது வரை சொன்ன கருத்துக்கள், உதாரணங்கள் மூலம் புரிய வேண்டியது என்னவென்றால் நாம் புலன்களிலிருந்து வெளியே வந்து பார்த்தால், நமக்கு இயற்கையிலேயே intellegence இருப்பது தெரியும். அதாவது நமக்கு எல்லா அனுபவமும், அறிவும் data-வாக நம்முள்ளேயே இருக்கிறது. அது எப்போது தெரியும் என்றால் நம்மிடம் ஒருவர் ஒரு பிரச்சனைக்கு தீர்வு கேட்டு வந்தால், விலாவரியாக விளக்குவோம். அதே பிரச்சினை நமக்கு இருக்கிறது என்றோ, இருப்பது தெரிந்தால், அதை தீர்க்காமல் இருக்கிறோம் என்பது கூட தெரியாமல் இருக்கும். காரணம் நம் புலன்களுக்கு தேவையான திருப்தியை ஒட்டிய அபிப்ராயங்கள், அனுமானங்கள். அதனால் புலன்களை விட்டு வெளியே வந்து பார்த்தாலே நம்முள்ளேயே தேவையான அறிவு, ஞானம் இருப்பது தெரியும். அதை Intelligence என்று எடுத்துக் கொள்ளலாம். அதை எங்கே, எப்போது, எந்த அளவு செய்ய வேண்டும் என்ற விவேகம், பாகுபாடு தெரிவது intellect. அது புரிவதற்காக கர்மயோகி சொன்ன உதாரணம் - உடலுக்கு intelligence உண்டு என்பது தெரியும். உயிர், இதய துடிப்பு, ரத்த ஓட்டம், செல்களை புதுப்பிப்பது, குணப்படுத்துவது போன்றவற்றை intellegence என்று எடுத்துக் கொள்ளலாம். அது எவ்வளவு சூடு சாதாரணமாக இருக்க வேண்டும், ஜூரம் வந்தால் எப்படி

இருக்க வேண்டும், இதயத் துடிப்பு சாதாரணமாக எவ்வளவு இருக்க வேண்டும், ஓடும் போது, ஆர்வத்தில், பயத்தில், பட்டப்படிப்பில், எவ்வளவு இருக்க வேண்டும், எப்போது வெள்ளை அணுக்கள் அதிகமாக வேண்டும், எப்போது சிகப்பு அணுக்கள் அதிகமாக வேண்டும் என்பது போன்றவையே intellect.

அதே போல உணர்வு நிலையில் புரிந்துக் கொள்ள வேண்டுமென்றால், நாம் ஒரே நேரத்தில், தந்தை, கணவன், அண்ணன், மகன், நண்பன், அன்பர், முதலாளி என்று ஏராளமான பாத்திரங்களை ஏற்றுக் கொண்டு இருந்தாலும், தந்தையிடம் நடப்பதை போல மகனிடம் நடப்பதில்லை, மனைவியிடம் நடப்பது போல தங்கையிடமும், மகளிடமும் நடப்பதில்லை. நண்பரிடம் நடப்பது போல அன்பரிடம் நடப்பதில்லை. அன்பர் என்றாலும் யாரிடம் எவ்வளவு சொல்லலாம், எதைச் சொல்லலாம், என்பது போன்றவற்றை, அவற்றை ஒட்டிய உணர்வுகளை ஆராய்ந்தால், எல்லாவற்றுக்கும் அடிப்படை பண்பு பெரும்பாலும் ஒன்றாக இருக்கும். அதை intelectual என்று எடுத்துக் கொண்டால், உணர்வில் அந்த ஞானத்தை, நடத்தைக்கான அறிவை, சாரத்தை எப்படி பெற்றோம் என்பதை யோசித்தால், அதன் மூலம் நமக்கு ஏதாவது புரிந்தால் அதை intellect என்று சொல்லலாம்.

இதை செய்யும் போது, நம் மனம் பெற்ற அறிவால் செய்வதால், அது ஏதோ ஒரு தர்க்கத்தின் அடிப்படையில், காரணங்களின் அடிப்படையிலேயே (logic and reasoning )இருக்கும். எந்த அளவிற்கு நாம் நம் புலன்களை விட்டு வெளியே வந்து ஆராய்கிறோமோ ,அந்த அளவுக்கு அது உண்மை, சத்தியம், மெய்யுணர்வு என்ற நிலையைத் தரும். உண்மையும், சத்தியமும் intelligence என்றால், மெய்யுணர்வு intellect.

பஞ்ச பாண்டவர்கள் வனவாசம் ஆரம்பித்த பின் பதிமூன்றாம் நாள் அவர்களுக்குள் நடந்த விவாதத்தில் கிருஷ்ணர் குறுக்கிட்டு, இன்றோடு பன்னிரண்டு ஆண்டு வனவாசமும், அதன் பின் அஞ்ஞானவாசமும் முடிந்து விட்டது, நாம் போய் ராஜ்யத்தை கேட்கலாம் என்றார் கிருஷ்ணர். தர்மர் திகைத்த போது வெவ்வேறு பஞ்சாங்கங்களைப் பற்றிக் கூறி ஒரு பஞ்சாங்கத்தின் படி நாம் முடித்துவிட்டோம் என்று கூறலாம் என்றார் . தர்மர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது இறைவனே வந்து சொன்னாலும் நம் புலன்கள் அது தந்த உணர்வு, மனம் ஏற்கவில்லை என்றால் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்பதையே இது காட்டுகிறது.

இந்த உதாரணங்கள் சரியாகப் புரிந்தால் நாம் வளர வேண்டிய இடம் புரியும். தினம் தினம் நாம் முடிவு எடுக்க வேண்டிய இடங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அடுத்து என்ன படிக்கலாம், என்ன வேலை செய்யலாம், வேலையை விடலாமா , தொழில் செய்யலாமா, எந்த college -யில் சேரலாம், எப்படிப்பட்ட வரன் தேவை என்பது போன்ற ஏராளமான கேள்விகள் தினந்தோறும் எழுகிறது. ஆனால் அவற்றுக்கெல்லாம் முடிவை நம் அறிவு, அனுபவம், அடிப்படையில், அல்லது அன்றைய கல்வி, சமுதாய, வியாபார சூழலை ஆராய்ந்து, காரண காரியங்களை ஆராய்ந்து எடுக்கிறோமா என்றால் பெரும்பாலும் இல்லை என்பதே பதிலாக இருக்கும். பெரும்பாலும் உறவுகள், நண்பர்களின் பார்வை, எண்ணம் தான் நம் முடிவுகளுக்கு காரணமாக இருக்கும்.

நமக்குத் தெரிந்ததே முடிவில்லை. அவற்றையெல்லாம் தாண்டி ஏதோ ஒன்று இருக்கிறது என்பது நமக்குத் தெரியும், என்றாலும் அதைப் பற்றி நாம் சிந்திப்பதே இல்லை. தொட்டு பார்க்க என்று சில மட்டுமே உண்டு, சட்டம் கண்ணுக்குத் தெரியாது. உறவை உணரத் தான் முடியும், அதற்கு அடுத்த கட்டத்தில் அறிவு அதன் வாத பிரதிவாதங்கள், அதற்கு அடிப்படையான காரணங்கள், இவற்றை ஒட்டி நாம் எடுக்கும் முடிவுகள், அதற்கு மனம் தரும் ஆதரவு என்று ஒரு விஷயத்தை நடத்த ஏராளமான பகுதிகள் இருக்கிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மா இருக்கிறது. இவை எல்லாம் நமக்குத் தெரிந்தும் எதையும் நாம் கவனிப்பதில்லை. அந்தந்த நேரத்தில் எந்த புலன் திருப்தி அடைகிறதோ அதை ஒட்டியே நம் முடிவும் இருக்கிறது. தொடுவது சுகமானால் ஏற்றுக் கொள்கிறோம், நாக்குக்கு திருப்தியானால் ஏற்றுக் கொள்கிறோம். கண்ணுக்கு அழகாக இருந்தால் ஏற்றுக் கொள்கிறோம். - வாசனை நன்றாக இருந்தால் ஏற்றுக் கொள்கிறோம்.உதாரணமாக, ஊதுபத்தியும், சாம்பிராணியும், அதிகமாகும் போது அதை இறை சூழல் இருப்பதாக நினைக்கிறோம். ஆனால் அதன் பின் ஸ்தாபகரின் conciosuness அல்லது குடியிருக்கும் இறைவனின் consciousness அங்கு இருக்கிறதா என்று பார்க்காமல் இருக்கிறோம். வெளித் தோற்றங்களே எப்போதும் நமக்கு முக்கியமானதாக இருக்கிறது. இன்றைய TV , பேப்பரில் பார்க்கும் திருடர்கள், கொலைகாரர்கள் எவ்வளவு சிகப்பாக smart -ஆக இருக்கிறார்கள் என்று தெரிந்தாலும் - இன்னமும் சீரியலில் உருட்டு விழி, பரட்டை தலை, பட்டா பட்டி டீ-ஷர்ட் தான் திருடன் - கொலைகாரன் என்று ஏற்றுக் கொள்வது போல எப்போதும் நாம் புலன்களின் திருப்தியை அது தந்த அறிவை ஒட்டியே முடிவு எடுக்கிறோம். அதிலிருந்து வெளியே வரும் போது தான் நாம் பிற மனதின் நிலைகளை அடைய முடியும்.

குறிப்பாக intuitive mind . நேரடி ஞானம் பெறும் நிலையை அடைய முடியும். வாழ்வில் பல நிலைகள் இருக்கிறது. ஒரு நிலையில் கட்டுப்படாத பிரச்சினை அடுத்த அடுத்த நிலைக்கான சட்டத்திற்கு பிடிபடும். அந்த உயர்ந்த நிலைகளைப் பற்றி அறிய நாம் புலன்களை விட்டு வெளியே வர வேண்டும். வேதாந்த ஞானம் பெறும் வழி அதுவே.

இது வரை நான் சொன்னதெல்லாம் Mental Development என்னும் நிலையே. கர்மயோகி இதை ஒவ்வொரு அன்பரும் பெற வேண்டும். அந்த நிலைக்கு அனைவரும் வர வேண்டும் என்று நினைத்தே, பல கட்டுரைகளை புத்தகங்களை எழுதியிருக்கிறார். Glen Domen முறைக் கல்வி அவருக்கு மிகவும் பிடித்ததற்கு காரணம் அதை அந்த கல்வி முறை தருவதாக நினைத்தார். அதற்கு அடுத்த நிலையில் sense-based education என்று ஒன்றை உருவாக்க விரும்பினார். அது intellect, pure reason, ஆகியவற்றைத் தாண்டி intuition , insight ஆகியவற்றை தர முடியும் என்று நம்பினார். என்ன காரணத்தாலோ அது பரவாமல் -நாம் சிந்திக்கும் வாய்ப்பே இல்லாமல் போய் விட்டது.

நாம் intuition - Insight போன்ற உயந்த நிலைகளை பெற வேண்டுமானால் அதை தாண்டிய மெய் ஞானம் என்னும் ஞானத்தை நேரடியாக உணர வேண்டுமானால் படிப்படியாக தான் செல்ல முடியும்.

Logic, Reason, Judgement , Observations , Perception - என்று அதன் படிகளை சொல்கிறார். முதலில் ஒரு விஷயத்தை பற்றிய தர்க்கம், அதன் பின், அதன் பின் உள்ள உண்மையான காரணம், அதன் பின் அதன் மீதான நம் தீர்ப்பு அல்லது முடிவு - அந்த முடிவை எடுத்தவுடன் நம் மனம், உணர்வு, சூழல் ஆகியவற்றை கவனிப்பது. அதன் பின் அத்துடன் ஒன்றி அதன் பின் உள்ள நுண்சட்டங்களை கவனித்தல் என்று பழக்கப் படுத்தினால் நாம் இந்த ஐந்து நிலைகளைக் கடந்து pure reason - தூய அறிவு - என்ற நிலைக்கு வருவோம்.

இதற்கு உதாரணமாக, அப்படி கவனிக்க வேண்டிய இடங்களாக கீழ்கண்டவைகளை எடுத்துக் கொள்ளலாம். ஒரு விஷயம் நடக்கத் தேவையான திறன் திறமைகள், அதை தாண்டியவற்றிக்குள்ள அதன் தொடர்பு, காரண காரியம் என்னும் தத்துவம், பின்னணியாக உள்ள நியதிகள், சூழலின் தாக்கங்கள், அது சொல்லும் சகுனங்கள், அதற்கு அடுத்தடுத்த நிலைகளுக்கான நியதிகள், மனக்குறை, குணக் குறை, லட்சியமும் சுயநலமும் கலந்துள்ள நிலை, முன் கட்டத்தில் அரைகுறையாக முடித்த செயல்கள், நம் செயலை ஒத்த மற்ற செயல்களின் தொடர்பு,

ஒவ்வொரு செயலுக்கும் முன் நம் மனப்பான்மை, அதன் நோக்கம், அதன் பின் உள்ள குறிக்கோள், false ஹூட் வழிமுறைகளின் மேல் நம்பிக்கை, falsehood -டுடன் மறைமுகத் தொடர்பு, செயலுக்குத் தேவைப்படும் காலம், பொருள்களின் ராசி, மனிதர்களின் ராசி, நாம் முன்பு செய்த செயல்கள் நம்மை பாதிப்பது, நாம் செய்யும் விரயங்கள், நம் முயற்சியின் முழுமை, சூட்சுமத் தொடர்பு என்று நம்மால் பார்க்க முடிந்தவை அனைத்தும் இந்த ஐந்து தலைப்புகளில் வரும். இதையெல்லாம் பார்க்கும் உஷார்த்தனத்தை வளர்த்துக்கொள்வது உட்பார்வை, உள்ளுணர்வு ஆகிவற்றை அது தரும் ஞானத்தை பெற உதவும்.

சாதாரண மனிதனுக்கு தன் உள்ளுணர்வு பெரும்பாலும் புரிவதில்லை. தனக்குள்ள குறைகளை மனிதன் தானே புரிந்துக் கொள்ள முடியாது. ஆனால் புற நிகழ்ச்சிகளைக் கொண்டு தன்னை உணர ஆரம்பித்தால் அவனுக்கு புரியாதது என்று எதுவும் இருக்காது. அப்படி புரிந்துக் கொள்பவனுக்கு பிரச்சினை என்று எதுவும் இருக்காது. சாதாரண மனிதனுக்கு தன் உள்ளுணர்வு பெரும்பாலும் புரிவதில்லை. தனக்குள்ள குறைகளை மனிதன் தானே புரிந்துக் கொள்ள முடியாது. ஆனால் புற நிகழ்ச்சிகளைக் கொண்டு தன்னை உணர ஆரம்பித்தால் அவனுக்கு புரியாத என்று எதுவும் இருக்காது. அப்படி புரிந்துக் கொள்பவனுக்கு பிரச்சினை என்று எதுவும் இருக்காது.

விருப்பு, வெறுப்பின்றி, நம் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், செயல்களையும் கூர்ந்து கவனித்து, நமக்கு வரும் mail -கள் , visitor -கள் , நடக்கும் நிகழ்ச்சிகள், தெருவில் கடந்து போகும் நிகழ்சிகள், ஆகியவற்றுடன் ஒப்பிட்டு பார்த்துக் கொண்டே இருந்தால், இந்த தொடர்பு பூரணமாகத் தெரிய வரும். அது ஒரு முழுமையான வாழ்க்கைக்குத் தேவையான ஞானம். நம் எதிர்காலத்தை நாமே அமைக்க உதவும். பிரச்சினை ஏற்பட்டால், எதை மாற்றினால் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பது விளங்கும். பிரச்சினை விலகும். வாழ்வின் சட்டங்கள் புரியும். வாழ்வு நம் கட்டுப்பாட்டில் வரும். வாழ்வில் உள்ள மனிதர்கள், சூழல் நம் கட்டுப்பாட்டில் இருக்கும் .

அதுவே pure reason தூய அறிவு நிலைக்கு நம்மைக் கொண்டு செல்லும். அதுவே - உயர்ந்த ஞானம் அல்ல- என்றாலும் நாம் குறிப்பிட்ட உயரத்தை எட்டி விட்டதற்கான அடையாளம். காரணம் அந்த நிலையில் நாம் நம் அத்தனை அபிப்ராயங்கள், அனுமானங்கள், விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றிலிருந்து வெளியே வந்து இருப்போம். அகந்தையின் தாக்கம் மிகக் குறைவாக உள்ள இடம் அது. நம்முடைய புலன்களை அது தரும்

வழிகாட்டல்களை கடந்த நிலை அது. detachment from senses என்னும் உயர்ந்த நிலை அது. அந்த நிலைக்கு வந்த பிறகு insight intuition என்னும் நிலைக்குச் செல்வது எளிது . இந்த இடத்தை reason without any intelligence or intellect என்கிறார். நினைவுக்குரியது விபரம், அறிவுக்குரியது எண்ணம், இவையிரண்டும் இல்லாமல் பெறுவது மெய் ஞானம் என்று தினசரி செய்திகளில் சொல்லியிருக்கிறார். அதன் முதல் அடையாளம் எல்லாரையும் போல நினைக்காமல் - வித்தியாசமாக சிந்திப்பது. வித்தியாசமாக சிந்திப்பது என்பது இதுவரை நம் புலன்கள் மூலம் அறிவு பெற்ற data - அதன் மூலம் உருவான நம் அபிப்பிராயங்கள், சுபாவங்கள் ஆகியவற்றில் இருந்து வெளியே வந்து சிந்திப்பது.

நம்மை உற்று கவனித்தால், நாம் நம் சொந்த logic -க்கில் கட்டுப்பட்டு கிடப்பது தெரியும். ஒன்று உணர்வு கேட்டு மனம் பதில் சொல்கிறது. அல்லது மனம் கேட்டு உணர்வு பதில் சொல்கிறது. ஒரு inch tape கொத்தனாருக்கு உபயோகமாகலாம். tailor க்கு உபயோகமாகலாம். ஆனால் மலையை அளக்க, கடலை அளக்க அதனால் முடியாது என்பது போல, நம் மனம், உணர்வு, இவை இரண்டுக்கும் பலம் தரும், வழி தரும் (strength and direction தரும்) புலன்கள் மூலம் நாம் எந்த உயர்ந்த ஞானத்தை அல்ல உயர்ந்த பண்பைக் கூட தெரிந்துக் கொள்ள முடியாது. அதன் மூலம் கிடைக்க கூடிய ஆனந்தத்தையும் அனுபவிக்க முடியாது. அதைத் தாண்டிய கருவி ஒன்று தேவை. அந்த கருவியே நம்மை அகந்தையின் சித்தத்திலிருந்து ஆன்மாவின் சித்தத்திற்கு நம்மை கொண்டுச் செல்லும். அதுவே பிரம்மத்தின் பன்முகத்தன்மையையும், அதனுள் உள்ள ஒருமையையும் நமக்கு தெரியப்படுத்தும், அது நம் தனித்தன்மை நமக்குத் தெரியும் போது தான் நமக்குப் புரியும். நம் தனித் தன்மை பிரபஞ்சமயமாகும் போது தான் அந்த பேருண்மை வெளிப்படும்.

Individuality Universalizing Itself என்று பகவான் சொல்வது அதையே

தனித் தன்மை, பொதுத் தன்மை பெறும் போது - சாரம் என்பதை அறிவதால் அவற்றை பயன்படுத்தவும், எதையும் முழுமையாக உயர் நிலையில் செய்யவும், நடந்ததை மாற்றவும் முடிகிறது. பயன்படுத்த சமூக அறிவின் சாரமும், செய்வதற்கு பகுத்தறிவும், மாற்ற ஆன்மீக ஞானமும் தேவை.

அந்த Individuality என்பது பண்புகளை அடிப்டையாகக் கொண்டது என்பதால், அகந்தையானது எந்த அளவிற்கு வெளியே வருகிறதோ, அந்த அளவிற்கு Individuality வரும் என்பதால் அதற்கு அடிப்படையாக rationality அமைகிறது. சென்ற கூடல்களில் சொன்னது போல அகந்தையின் பிரித்தறியும் அந்த

தன்மையை பரிணாமத்தில் முன்னேற, பண்புகளை பெற, பயன்படுத்தும் போது அது supra rational knowledge ஆகிறது . அது வாழ்வு நம் மேல் தொடுக்கும் போர்களுக்கு உடனடி பதிலை தரும் என்கிறார். துன்பம் இல்லாத வாழ்க்கைக்கான ஞானம் - ஆனந்தத்திற்கான ஞானம் -நமக்கு அப்போது தான் கிடைக்கிறது.

வாழ்வு புலன்களால் பெற்ற உணர்வை, மனதிற்கு கொண்டு போய் , எண்ணமாக மாற்றி அந்த எண்ணத்திற்கு உடலை கட்டுப்படுத்துகிறது. உடல் செயலை செய்கிறது. அப்படி இல்லாமல் ஆன்மாவின் ஆர்வம் எண்ணத்திற்குச் சென்று நேரடியாக உடலை கட்டுப்படுத்தும் ஒரு நிலை நம்மை ஆன்மாவின் சித்தத்திற்கு கொண்டு செல்லும். ஆன்மா இப்போது மறைவாக இருப்பதாக தெரிந்தாலும் அவ்வப்போது அது வெளியே வந்து தன் கருத்தை கூறுகிறது. சூட்சுமமாக வெளிப்படுகிறது. சகுனங்கள், புற அறிகுறிகள், மனிதர்கள், சூழல்கள் மூலம் காட்டுகிறது. நாம் செல்ல வேண்டிய பாதையை காட்டுகிறது. புலன்களில் இருந்து வெளியே வரும் மனிதன் அதை கண்டுக் கொள்ள முடியும். தன் திறமை, அறிவு, அபிப்ராயம், அனுபவம் மேல் நம்பிக்கையுள்ள மனிதனுக்கு அவற்றை காணும் பாக்கியம் கிடைக்காது. ஆன்மாவின் அழைக்கும் குரல் நம் காதில் விழுவதில்லை. விழ வேண்டுமென்றால் பகுத்தறிவு தேவை. அதை தருவது logical mind. நம்முள் நாம் செய்யும் தர்க்கம். நாம் பிரம்மத்திலிருந்து பிரிந்து விட்டதால் இது தேவைப்படுகிறது. அப்படியில்லாமல் நமக்கு பிரம்மம் என்பது அன்னை என்பதால் அன்னையின் logic-ஐ எடுத்துக் கொள்ளும் போது நாம் பிரம்ம ஞானத்தை நேரடியாகப் பெறுகிறோம். அன்னை என்னும் மந்திரத்தில் நாம் புலன்களைக் கடக்கிறோம் என்று daily message -ல் சொல்கிறார் கர்மயோகி.

வேதாந்தம் பிரம்ம ஞானத்தின் மூலம் பிரபஞ்சத்தை அறிகிறது. பகுத்தறிவால் அன்னையின் மூலம் அதை அறிய முடியும் என்கிறார். வேதாந்தம் வாழ்வை விட ஜீவனை பற்றி மட்டுமே பேசுகிறது. பேசினாலும், பெற்றாலும் நம் சுபாவத்திற்கு புரியும் படி, அறியும் படி ஞானம் தர அதனால் முடியவில்லை. வாழ்வில் அதை நடைமுறை படுத்துவது என்பது அதை விட கடினம். ஆனால் அன்னையுடன் ஒன்றுவது identify with Mother's Consciousness - அதைத் தர முடியும். வேதாந்தம் பிரம்ம ஞானத்தின் மூலம் உலகை அறிய முயல்கிறது. நாம் மேல் மனதின் பின்னால் இருக்கும் அன்னை மூலம் அறிய முடியும். ஞானி வாழ்வை துறந்து தன் பாதையில் செல்ல ஞானத்தைத் தேடுவதால் அவர் பெறும் ஞானம் வேறு யாருக்கும் பயன் படாது. ஆனால் அன்னைக்காக பெறும் அந்த ஞானம் உலக வாழ்வில் ஆன்மா மிளிர பயன்படும் . அது விரும்பும் ஆனந்தத்திற்குப் பயன்படும்.

வேதாந்த ஞானம் என்னும் இந்த அத்தியாயத்தில் - புலன்கள் அகந்தையால் எழுந்தன, புலன்கள் அகந்தையின் கருவி. புலனறிவு அகந்தையின் அறிவு. அறிவின் உறைவிடம் மனம். அதனால் அதுவும் புலனுக்குட்பட்டது. வேதாந்தம் அனைத்தையும் புலனிலிருந்து பிரிப்பதால், நம்மால் நேரடி ஞானத்தை பெற முடியும் என்று பகவான் கூறுகிறார். அதை நடைமுறையில் செயல்படுத்த முடியுமா என்ற நோக்கில் சிந்தித்த போது தோன்றியதை இப்போது நான் பகிர்ந்து கொண்டேன். இதன் தொடர்ச்சியை அடுத்த கூடலில் பேசலாம்.